# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097146

1. District : மாவட்டம் நாமக்கல் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 8/AC/2018 | Date: நாள் 12.05.2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல்: 1) 23.4.2018 தேதி சுமார்
Date to : நாள் வரை: 2) 8.5.2018ம் தேதி மற்றும் சுமார் 12.00 மணி

Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்: 11.00 மணி
Time to : நேரம் வரை: 3) 9.5.2018ம் தேதி மற்றும் சுமார் 15.45 மணி

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 9.5.2018ம் தேதி
Time : நேரம் 4) 11.5.2018ம் தேதி மற்றும் சுமார் 11.00 மணி மற்றும் 12.30 மணி 13.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 9.5.2018 VOL-II
Time : நேரம் 13.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 40 கி.மீ மேற்கு

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு.

(c) In case outside limit of this Police Station, then the Name of P S — District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. சங்கர்
(b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் A.C. வெங்கடாசலம்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 45
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் சுயதொழில் ரிக்வண்டி
(g) Address : முகவரி க.எண். OB/2, வடிவேல் பிள்ளை தெரு, தொண்டிகரடு, திருச்செங்கோடு, நாமக்கல் - மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. பாஸ்கரன், வருவாய் கோட்ட அலுவலர், திருச்செங்கோடு
2) திரு. கந்தவேல், உதவியாளர் (கி)மா.அ, வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

முன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பதிந்துவைக்கப்படுகிறது.

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No:2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக் வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / ~~பணிக்கப்படுதல்~~ A.T.ஜெய்குமார் தவி கா.து.கண்காணிப்பாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 12.5.18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் [signature] 12/5/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.05.2018 - 17.00 மணி

Name: பெயர் A.T. ஜெய்குமார்
Rank: நிலை கா.து.க. No. எண் ......
துணை கண்காணிப்பாளர்
மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு,
நாமக்கல்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவு 7-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

09.05.2018-ஆம் தேதி புதன்கிழமை மதியம் 13.00 மணிக்கு நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, தொண்டிகரடு, வடிவேல்பிள்ளை தெரு, கதவு எண்.OB/2 என்ற முகவரியில் வசிக்கும் திரு.A.C.வெங்கடாசலம் என்பரின் மகன் V.சங்கர் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புதல் திரு.V.சங்கர், த/பெ.A.C.வெங்கடாசலம், கதவு எண்.OB/2, வடிவேல்பிள்ளை தெரு, தொண்டிகரடு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல். ஐயா, நான் திருச்செங்கோடு தொண்டிகரடில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமாக 2 போர்வெல் வண்டிகள் உள்ளன, மேலும் டைமண்ட் டீசல் என்ற பெயரில் போர்வெல் வண்டிக்கான கம்ப்ரசர் உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறேன். எனது போர்வெல் வண்டிகள் வெளியூர்களிலும், வெளிமாநிலங்களிலும் ஓடி வருவதால், தொழில் முறையில் நான் அடிக்கடி அதிக பணத்துடன் வெளியில் சென்று வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால் எனது பாதுகாப்பிற்காக வேண்டி பிஸ்டல் வைத்துக்கொள்ள முடிவு செய்தேன். அதற்காக உரிமம் வேண்டி கடந்த 12.12.2017 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு பதிவு தபால் மூலம் மனு ஒன்றை அனுப்பினேன். பின் கடந்த 4 மாதங்களுக்கு முன் ஜனவரி மாதத்தில் திருச்செங்கோடு கோட்டாட்சியர் திரு.பாஸ்கரன் அவர்கள் எனது வீட்டிற்கு வந்து விசாரணை மேற்கொண்டார். அன்றைய தினம் நான் வீட்டில் இல்லை. அதனால்,

எனது அப்பாவிடம் என்னை அவருடைய அலுவலகத்தில் வந்து பார்க்கச் சொல்லிவிட்டு சென்றுள்ளார். அதன்பின் அவர் எனது வீட்டிற்கு வந்து சென்ற மூன்று நாட்கள் கழித்து நான் திருச்செங்கோடு கோட்டாட்சியர் அலுவலகம் சென்று கோட்டாட்சியர் திரு.பாஸ்கரன் அவர்களை சந்தித்தேன். அவர் என்னிடம் உங்களுடைய Income Tax கட்டிய விபரங்களை எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று சொன்னார். அதன்பின் நான் எனது ஆடிட்டர் மூலம் 2017-2018 ஆண்டுக்குரிய வியாபார கணக்கையும் முடித்து 2016-2017 மற்றும் 2017-2018 ஆகிய இரண்டு வருடங்களுக்குரிய Income Tax கட்டிய விபரங்களுடன் ஏப்ரல் 15 தேதி வாக்கில் கோட்டாட்சியர் திரு.பாஸ்கரன் அவர்களை நேரில் சந்தித்து கொடுத்தேன். அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு "சி" செக்சன் அசிஸ்டன்ட் கந்தவேல் அவர்களை கூப்பிட்டு கொடுத்துவிட்டு அவரை போய் பாருங்கள் என்று என்னை அனுப்பிவிட்டார். "சி" செக்சன் அசிஸ்டன்ட் கந்தவேல் தற்பொழுது வேலை அதிகமாக உள்ளது இரண்டு மூன்று நாட்கள் கழித்து வாங்க பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார். அதன்பின் கடந்த 23.4.2018-ம் தேதி அன்று காலை சுமார் 11.00 மணிக்கு நான் திருச்செங்கோடு கோட்டாட்சியர் அலுவலகம் சென்று, கோட்டாட்சியர் திரு.பாஸ்கரன் அவர்களை நேரில் சந்தித்தேன். அவர் என்னிடம் விபரம் கேட்டார் நான் பிஸ்டல் லைசன்ஸ் விசயமாக வந்துள்ளதாக சொன்னேன். அவர் "சி" செக்சன் அசிஸ்டன்ட் கந்தவேலை கூப்பிட்டு இவரை விசாரித்து ஸ்டேட்மென்ட் போட்டிடுங்க என்று சொன்னார். அசிஸ்டன்ட் வெளியே சென்றவுடன் என்னிடம் நீங்க உங்களுடைய ஸ்டேட்மென்ட் கொடுத்திடுங்க, அதோடு கொஞ்சம் செலவாகும், எவ்வளவுன்னு அசிஸ்டென்ட் கந்தவேல் சொல்லுவார், அதுபடி கொடுத்திடுங்க என்று சொன்னார். பின்னர் "சி" செக்சன் அசிஸ்டன்ட் என்னை விசாரித்து ஸ்டேட்மென்ட் பெற்றார். அதை நான் படித்து பார்த்துவிட்டு கையெழுத்து செய்தேன். பின் அவர் என்னிடம் RDO சார் சொல்லியிருக்கார் அதுபடி செய்யுங்க. ஏற்கனவே இதேமாதிரி லைசென்சுக்கு பாலப்பட்டிக்காரர் RDO

சாருக்கு 15,000 ரூபாயும், எனக்கு தனியாக ரூ.2000/-மும் கொடுத்துள்ளார். அதே மாதிரி நீங்களும் கொடுத்துடுங்க. RDO சாருக்கு உரிய ரூ.15,000/- நீங்களே அவர்கிட்ட கொடுத்திட்டாலும் சரி, என்கிட்ட கொடுத்தாலும் சரி என்று சொல்லிவிட்டு நானே உங்களுக்கு போன் செய்கிறேன் என்று சொன்னார். பின்னர் அவரிடமிருந்து எனக்கு எந்த போனும் வரவில்லை. அதனால் நான் அவருடைய செல்போன் நெம்பர் 9789142223 என்ற நெம்பருக்கு என்னுடைய 9442556088 என்று எண்ணிலிருந்து நேற்று மதியம் சுமார் 12.00 மணிக்கு அசிஸ்டன்ட் கந்தவேல் அவர்களுக்கு போன் செய்து எனது பிஸ்டல் லைசென்ஸ் பேப்பர் சம்பந்தமாக கேட்டேன். அவர் வேலை அதிகமாக இருந்ததால் போன் செய்யவில்லை என்றும், என்னுடைய சொத்து சம்பந்தமாக கம்ப்யூட்டர் சிட்டா கொண்டு வந்து கொடுத்தால் அதனுடன் அட்டேச் செய்து அனுப்பி விடுவதாகவும், நான் சொன்ன மாதிரி அமௌவுண்டும் கொடுத்திடுங்க என்றும், நேரில் வாங்க பேசிக்கலாம் என்றும் சொன்னார். நான் திருச்செங்கோடு கோட்டாட்சியர் திரு.பாஸ்கரன் அவர்களுக்கும், "சி" செக்சன் அசிஸ்டன்ட் திரு.கந்தவேல் அவர்களுக்கும் என்னுடைய பிஸ்டல் துப்பாக்கி உரிமத்திற்கு பரிந்துரை செய்து அனுப்ப லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி இன்று நாமக்கல் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறையில் வந்து புகார் கொடுக்கிறேன். நான் ரூ.15,000/- மற்றும் ரூ.2,000/- பணத்துடன் திருச்செங்கோடு கோட்டாட்சியர் திரு.பாஸ்கரன் அவர்களையும், "சி" செக்சன் அசிஸ்டன்ட் திரு.கந்தவேல் அவர்களையும் நேரில் சந்திக்க உள்ளேன். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) V.சங்கர், 9.5.18.

மேற்கண்ட புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், குற்ற அலுவலர்கள் கையூட்டு கேட்பதை உறுதி செய்யும் பொருட்டும்

ஒரு முன்விசாரணைக்கு உத்திரவிடக்கோரி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு, மின்னஞ்சல் மூலம் புகார் வாக்குமூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண்.PE.132/2018/REV/NK, நாள்:09.05.2018-ல் கண்ட உத்திரவுப்படி 09.05.2018-ம் தேதி மாலை 15.00 மணிக்கு குற்ற அலுவலர்கள் திருச்செங்கோடு வருவாய் கோட்ட அலுவலர் திரு.பாஸ்கரன் மற்றும் வருவாய் கோட்ட அலுவலக "சி" செக்சன் அசிஸ்டன்ட் திரு.கந்தவேல் ஆகியோர்கள் மீது ஒரு முன்விசாரணை பதிவு செய்யப்பட்டது. அந்த முன் விசாரணையின் போது, 09.05.2018-ம் தேதி மாலை சுமார்.15.45 மணிக்கு புகார்தாரர் திரு.V.சங்கர் திருச்செங்கோடு வருவாய் கோட்ட அலுவலகம் சென்று, "சி" செக்சன் உதவியாளர் திரு.கந்தவேல் அவர்களை நேரில் சந்தித்து, தனது பிஸ்டல் லைசென்ஸ் குறித்து கேட்டபோது, அவர் உங்களுடைய சொத்துக்களுக்கான கம்ப்யூட்டர் பட்டாக்களையும் மேலும் ஏற்கனவே சொன்னதுபோல் கோட்டாட்சியருக்கு தனியாக ரூ.15,000/-மும் தனக்கு தனியாக ரூ.2,000/-மும் கொடுத்துவிடவேண்டும் என்றும் கூறியுள்ளார். புகார்தாரர் ரூ.15,000/-லிருந்து குறைத்துக்கொள்ள முடியுமா என்று கேட்டதற்கு, ஏற்கனவே பிஸ்டல் லைசென்ஸ்ற்காக பாலப்பட்டிக்காரர் ஜெயசந்திரன் ரூ.15,000/-ம் தான் கொடுத்துள்ளார். அவருக்கு சிபாரிசு செய்து பைல் அனுப்பியாச்சி என்று சொல்லியுள்ளார். மேலும், தற்போது கோட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லையென்றும் அவர் இருக்கும்போது நேரில் அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்றும் சொல்லியுள்ளார். பின் புகார்தாரர் 11.05.2018-ந் தேதி காலை சுமார் 11 மணிக்கு கோட்டாட்சியர் அலுவலகத்தில், "சி" செக்சன் உதவியாளர் திரு.கந்தவேல் அவர்களை சந்தித்து, கோட்டாட்சியர் அவர்களை சந்திக்க வந்துள்ளதாக தெரிவித்தபோது, கோட்டாட்சியர் தற்போது இல்லை

வந்தவுடன் பாத்துக்கொள்ளுங்கள் நான் சொல்லிய அதே தொகையைதான் அவரும் சொல்லுவார் என்று சொல்லியுள்ளார். அன்று மதியம் 12.30 மணி சுமாருக்கு புகார்தாரர் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களை அவரது அலுவலக அறையில் நேரில் சந்தித்தபோது, அவர் உதவியாளர் திரு.கந்தவேல் சொன்னதுபோல் தனக்கு ரூ.15,000/-மும் அவர் கூறிய சொத்து சம்பந்தமான கம்ப்யூட்டர் பட்டாக்களையும் கொண்டு வந்து கொடுங்கள், உங்கள் பைலை சிபாரிசு செய்து அனுப்பி விடுகிறேன் என்று கூறியுள்ளார். எனவே புகார்தாரரின் பிஸ்டல் லைசன்சுக்கான பரிந்துரை அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்க புகார்தாரர் திரு.V.சங்கர் அவர்களிடமிருந்து திரு.பாஸ்கரன், வருவாய் கோட்ட அலுவலர், திருச்செங்கோடு அவர்கள் ரூ.15,000/-மும் மற்றும் திரு.கந்தவேல், "சி" பிரிவு உதவியாளர், திருச்செங்கோடு வருவாய் கோட்ட அலுவலகம் அவர்கள் ரூ.2,000/-மும் அவரவர்களுக்கென்று தனியாக கையூட்டாக கேட்டு பெற்றுக்கொள்ள சம்மதித்தது உறுதி செய்யப்பட்டது.

ஆகவே, எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதாக முன்விசாரணையில் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக வாய்மொழி ஒப்புதல் பெற்று இன்று 12.05.2018-ந்தேதி மாலை 16.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.8/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 7-ன்படி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.